(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 44 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, நவெம்பர் 18, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0005/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரச தொழில் முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, கௌரவ ரோஹித போகொல்லாகம அவர்களாலும் மற்றும் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் 2007, சனவரி 12 இல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்னே அவர்களினால் 2006, யூலை 20 ஆம் திகதி மற்றும் பகிரங்க தொழில் முயற்சிகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்களால் 2007, நவெம்பா 29 ஆம் திகதிய PS 12 இலக்கம் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) மேலேயுள்ளதற்கு அமைய விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0051/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கத்தினால் பெறப்பட்ட மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) வட்டி வீதத்தையும் மீளச்செலுத்தல் காலத்தையும்,

(iii) இந்தக் கடன்கள் பெறப்பட்டமைக்கான காரணத்தையும்,

(iv) இன்றுள்ளவாறு நாட்டின் மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும்,

(v) இக்கடன்கள் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய திகதியையும்,

(vi) செலுத்த வேண்டிய மொத்த வட்டியை அவற்றைச் செலுத்த வேண்டிய திகதிகளுடனும்,

(vii) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வட்டிச்செலவினத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே உள்ளவாறு செலுத்தித் தீர்க்கப்பட்ட கடன்கள் (மூலதனம் மற்றும் வட்டி),

(ii) ஆண்டொன்றுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை

என்பன பற்றிய அனைத்து தரவுகளையும் அடக்கிய அட்டவணையொன்றினை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இந்தக் கடன்தீர்த்தல் எந்த வருவாய்களிலிருந்து செலுத்தப்படும் என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0062/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவராது, தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு திறைசேரியின் செயலாளருக்கு அனுமதி வழங்கும் 6 ஆவது வாசகமொன்றை 2005, 2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அறிமுகப்படுத்தியதென்பதையும்,

(ii) இது பொது நிதி மீதான பாராளுமன்றத்தின் மேலாண்மையை கபடமான முறையில் கவர்ந்து கொள்வதோடு அதனை சிதைவடையவும் செய்கிறதென் பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இவ்வுறுப்புரிமையைப் பயன்படுத்தி 2006, 2007 ஆம் ஆண்டுகளில் திறைசேரியின் செயலாளரினால் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) எந்நோக்கத்தின் நிமித்தம் அவை பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அவற்றின் தலைப்பு இலக்கம் மற்றும் திட்டவட்டமான கருத்திட்ட குறியீடு ஆகியவற்றை அவற்றிற்கான விளக்கங்களுடன்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0192/ '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சர் ஒவ்வொருவரினதும் உத்தியோகபூர்வ அலுவலகங்கள் அரசாங்கக் கட்டிடங்க ளிலா தாபிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனமொன்றில் அல்லது தனியாருக்குரிய காணியொன்றில் அல்லது கட்டிடங்களில் குறித்த அலுவலகங்கள் தாபிக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தின் முகவரி, உரிமையாளரின் முகவரி மற்றும் பெற்றுக் கொள்ளப் பட்ட திகதி யாது,

(ii) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகங்களுக்குத் தேவையான இடவசதிகள் பெறப்பட்டிருப்பின் அதன் சதுர அடிகளுக்காக மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலவிடப்படுகின்ற தொகை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது வேறேதுமொரு அடிப்படையில் அலுவலகங்களுக்குத் தேவையான இடவசதிகளைப் பெறும் பொருட்டு வைப்புத் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அரசாங்கக் கட்டிடங்களில் குறித்த அலுவலகங்களைத் தாபிப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0251 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்விச் சேவைகள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0252 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டலுவல்கள் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0345/ '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின் பிரதி அமைச்சர் இற்றைவரை வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்,

(ii) அவற்றில் பிரதி அமைச்சரினது உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவ் விஜயங்களில் பிரதி அமைச்சருடன் கலந்து கொண்ட உத்தியோகத்தர் களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி விஜயங்களின் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருப்பின் அவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) பிரதி அமைச்சர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக் கம்பெனி மற்றும் விமானவகுப்பு யாவையென்பதையும்

அவர் தனித்தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வெளிநாட்டு விஜயங்களினால் இந்த நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டுக் கடன்கள், கருத்திட்டங்கள் அல்லது வேறு நன்மைகள் யாவையென்பதை அவர் அந்தந்த விஜயம் ரீதியாக தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0399/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0435 / '08

9.

கௌரவ பேமசிறி மானகே,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி, பழங்கள், தானியங்கள் மற்றும் பலசரக்குகளின் தொகைகளையும் அவற்றின் உப பிரிவுகளின் தொகைகளையும்,

(ii) இதற்கென செலவிடப்பட்ட தொகை மற்றும் ஈட்டப்பட்ட வருமானத்தை அமெரிக்க டொலர் மற்றும் ரூபாய்களில் வெவ்வேறாகவும்,

(iii) இது தொடர்பாக நடவடிக்கை எடுத்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் யாவர் என்பதையும்,

(iv) இவர்களுடைய நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட உணவு வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் பெயர், உரிய நிறுவனம், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியன யாவை,

(ii) இவ்வுணவு வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்து வெளிநாட்டு செலாவணியை சேமிக்க அரசுக்கு முறைப்படியானதொரு வேலைத்திட்டம் உள்ளதா,

(iii) அவ்வாறாயின், அது யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0612/ '08

10.

கௌரவ, பேமசிறி மானகே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாண மாகாண சபையின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி தென் மாகாண மாகாண சபையின் உறுப்பினர்கள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்.

(iv) ஆமெனில், வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டவாறு, வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் யாவையென்பதையும்,

(ii) விஜயம் செய்த நாடுகள் மற்றும் அதற்கான செலவினம் யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0489 / '08

11.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (RADA) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு,

(ii) அத்தகைய பணத்தொகை திறைசேரியினால் மாத்திரமா ஒதுக்கப்பட்டது,

(iii) வேறு ஏதேனுமொரு நிறுவனத்தின் மூலம் பணம் பெறப்பட்டுள்ளதெனில் அது எந்த நிறுவனத்திலிருந்து

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திற்கு (RADA) அரச பணத்தை ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர்களது பெயர் மற்றும் பதவிகள் தனித்தனியாக யாது,

(ii) அரச பணத்தை மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பொதுத் திறைசேரிக்கு அல்லது வேறேதேனும் அரச நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பின் அது யாரால்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி சட்ட ரீதியாக அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆவணங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0617/ '08

12.

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்குரிய இலங்கை திட்டமிடல் சேவையில் தற்போது உள்ளதான பதவிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) அப்பதவிகளில் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) மேற்படி வெற்றிடங்களுள் II/II ஆம் தரத்திற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை திட்டமிடல் சேவைக்கான ஆட்சேர்ப்பு திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுமா என்பதையும்,

(iv) இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை என்னவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0510/ '08

13.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கட்டுகம்பொல தேர்தல் தொகுதியிலுள்ள யக்வில கமநல சேவை நிலையத்தின் போவத்த பெரகும்பா விவசாயிகள் அமைப்பின் உத்தியோகத்தர் தெரிவு, 2007/10/11 ஆம் திகதி விவசாய உறுப்பினர்கள் 40 க்கு அண்மிய தொகையினர் கூடியிருந்தும் நடைபெறாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதன் பின்பு பன்னல பிரதேச சபை உறுப்பினரொருவரின் தலைமையில்10-15க்கு இடைப்பட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் உத்தியோகத்தர் தெரிவு நடை பெற்றதென்பதை அவர் அறிவாரா?

(இ) இவ்வுத்தியோகத்தர் தெரிவில் விவசாய அமைப்புக்குச் சொந்தமான ரூபா 35,000 (முப்பத்தையாயிரம்) க்கு மேற்பட்ட ஒரு தொகையை மோசடி செய்த ஒருவர் செயலாளரராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஒரு விசாரணை நடாத்தப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) உத்தியோகத்தர் தெரிவில் கலந்து கொள்ளாத ஒருவரைப் பொருளாளராக நியமிப்பது சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு இவ்வுத்தியோகத்தர் தெரிவை இரத்து செய்துவிட்டு மீண்டுமொரு உத்தியோகத்தர் தெரிவை நடாத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0521/ ' 08

14.

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் பொருட்டு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) 2007 ஆம் ஆண்டுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(iii) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு வெளிநாட்டுக் கடன்கள் அல்லது மானியங்கள் வழங்கப்படுகின்றதா,

(iv) மேற்படி, கருத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்பட உத்தேசிக் கப்பட்டுள்ளது,

(v) ஒவ்வொரு ஆண்டுக்காகவும் ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங் களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் அமைந்துள்ள பிர தேசங்கள் யாவை மற்றும் ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் காணியின் அளவு எவ்வளவு,

(iii) காணிகளுக்கு மேலதிகமாக இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி, கருத்திட்டத்தின் பொருட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எப்போது,

(iii) அதன் பிரகாரம் விதப்புரைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி, கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான விழாவுக்காகச் செலவிடப் பட்ட மொத்தத் தொகை எவ்வளவு,

(ii) இதில் விளம்பரப் பணிகளின் பொருட்டு பொறுப்பாயிருந்த கம்பனி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) தொலைக்காட்சி அறிவித்தல்கள், சுவரொட்டிகள் , பத்திரிகை அறிவித்தல்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் ஏனைய விளம்பரப் பணிகளின் பொருட்டு குறித்த கம்பனிக்குச் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0614/ '08

15.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 திசெம்பர் மாதம் நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர (க.பொ.த. சா. த.) பரீட்டைசைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒரு மாணவனேனும் சித்தியடையாத பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சைக்குரிய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர்கள் இருந்தனரா என்பதையும்,

(ii) இருக்கவில்லையெனில், அது எப்பாடங்களுக்கு என்பதையும்

அவர் குறிப்படுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட ஒன்பதாம் நாள்) - குழு ஆய்நிலையில் (பரிசீலனை நவெம்பர் 17ஆம் திகதி)

* 2.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 126, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து எழுநூற்றி முப்பத்து ஆறு மில்லியன் (1,736,000,000 ரூபா) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 126 | — | கல்வி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | பொதுநலம் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 1,736,000,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 1,736,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, நவெம்பர் மாதம் 4 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 7 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் 25,303,980,332 ரூபா.

* 3.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 306, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து ஐம்பது மில்லியன் (1,050,000,000ரூபா) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 306 | — | இலங்கை புகையிரதத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 186,000,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | 864,000,000 |
| | | மொத்தம் | 1,050,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, நவெம்பர் மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 8 வரையுள்ள மதிப்பீடு களின் மொத்தம் 27,039,980,332 ரூபா .

* 4.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 06 ஆம் திகதிய 1552/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | |
|---|---|---|
| **<u>தவிசாளர் (முழு நேர)</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |
| **<u>உறுப்பினர்கள்</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல்V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

* 14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ''2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்'' அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ''(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 17.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 22.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

* 23.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 25.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 26.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 27.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 28.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

* 29.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 30.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 31.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 32.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

எக்சத் ஜன இசுறு பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

வண. மூனமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்கள்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) எனும் சட்டமூலத்திற்கு குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிகளுக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.